பங்களிப்பு: எட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 7 திங்கட்கிழமை (22-12-1997) UTHAYAN A Livelynatioualyamiibajly கதிர் 23

# தனித்துப் போட்டியிட தமிழ் கட்சிகள் முடிவு!

## பகிஷ்கரிப்பு முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், டிசம்பர் 22

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலை பகிஷ்கரிப்பது தொடர்பாக நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்க் கட்சிகளிடையே இணக்கம் ஏற்படவில்லை. இதனை அடுத்து தமிழ்க்கட்சிகள் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளன.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற கூட்டமே தீர்மானம் எதுவும் எடுக்கப்படாத நிலையில் முடிவடைந்தது.

நேற்று முன்தினம் கூட்டப்பட்ட கூட்டம், ரெலோ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப காங்கிரஸுக்கு எல்லோரும் காலை வாருகினம் போல..!

## வரணிப் பகுதியில் நேற்று மோதல்!

யாழ்ப்பாணம், டிச. 22

வரணி, கரம்பைக்குறிச்சிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் இடையில் சிக்கிய இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் மரணமானார்.

நேற்றுக்காலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வீட்டினுள் இருந்த நாகன் ஜெயமணி (வயது 42) என்ற பெண்ணும் அவரது மகனான நாகன் ஜெனார்த்தனன் (வயது 7) என்பவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் வைத்தியசாலையில் நாகன் ஜெயமணி மரணமானார்.

(இ-9-173)

## தமிழ்நாடு காங்கிரஸில் பிளவு வாழப்பாடி புதிய கட்சி

சென்னை, டிச. 22

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி ''தமிழ்நாடு மக்கள் காங்கிரஸ்'' என்ற புதிய கட்சியை ஆரம்பித்துள்ளார்.

இதையடுத்து தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி பிளவுபட்டுள்ளது.

சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்த ராமமூர்த்தி விரைவில் தேர்தல் ஆணையத்தில் தமது கட்சி பதிவு செய்யப்படும் என்றார்.

எதிர்வரும் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான அணியுடன் தேர்தல் உடன்பாடு காணப்படும் என்றும்— காங்கிரஸ் கட்சிக்கு சோனியா காந்தி தலைமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் பங்குபற்ற புளொட் முடிவுசெய்தது என்?

யாழ்ப்பாணம், டிச. 22

குடாநாட்டில் அரசு நடத்த திட்டமிட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை பகிஷ்கரிப்பது தொடர்பாக ஆராய தமிழ்க்கட்சிகளினால் நடத்தப்பட்ட கூட்டங்களில், பகிஷ்கரிப்பு விடயம் சம்பந்தமாகவோ, பொதுவான பட்டியலுக்கான ஏற்பாடு ஒன்றின் கீழ் போட்டியிடுவது சம்பந்தமாகவோ இணக்கம் காணத் தவறியதன் காரணமாகவும் —

தமிழ்க்கட்சிகள் தேர்தல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாம் தனித்துப் போட்டியிடுவது தவிர்க்க முடியாததாகி விட்டது

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 22

''தமிழ் கட்சிகளை மோதவிடும் அரசின் தந்திரோபாயத்தை முறியடிக்க வேண்டும்; இதே வேளை இடம்பெயர்வு, பாதுகாப்பற்ற நிலை மற்றும் தமிழ்க்கட்சிகளின் ஒன்றுபட்ட செயற்பாடு பற்றிய மக்களின் விருப்பம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் பகிஷ்கரிப்புக்கு உடன்பட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். உள்ளூராட்சித்தேர்தல் வெறும் கேலிக்கூத்து!

### ரணில் விக்கிரமசிங்க கருத்து

கொழும்பு, டிச. 22

மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், வாக்காளர் இடாப்பு இல்லாத நிலையில், நடைபெறும் யாழ். உள்ளூராட்சித் தேர்தல் வெறும கேலிக்கூத்தான, ஒரு மோசடியான தேர்தலாகும். இதற்கு எதிராக ஐ. தே. க. நடவடிக்கை எடுக்கவுள்ளது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நேற்று நடந்த கட்சியின் 43 ஆவது தேசிய மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

10 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்வதனால் யுத்தத்துக்கோ அல்லது இனப் பிரச்சினைக்கோ தீர்வுகாண முடியாது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம்தான் இந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் சுயேச்சைக்குழு

யாழ்ப்பாணம், டிச. 22

ஈ.பி.டி.பி. அமைப்பில் இருந்து பிரிந்து சென்று இயங்கும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்ந்த குழு சார்பில் இன்று நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுயேச்சைக் குழுவாக இவர்கள் போட்டியிட விரும்பதாக தெரியவந்தது. (இ-3)

## யாழ். தேர்தலின் பின் இராணுவம் முகாமுக்குள்

### அமைச்சர் ஜயரட்ன கூறுகிறார்

கொழும்பு, டிச. 22

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவடைந்து தேர்ந்தெடுக்கப்படும் சபைகள் அங்கு தமது கடமைகளை ஏற்ற பின்னர் தற்போது குடாநாட்டில் இருக்கும் இராணுவத்தினர் முகாம்களில் வைக்கப்படுவர். இதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 17 வருட காலமாக யாழ். குடாநாட்டில் ஜனநாயக நடவடிக்கைகள் இல்லை. சிவில் நிர்வாகம் இல்லை. மக்களின் பங்களிப்புடனான இந்த ஜனநாயக நடவடிக்கைகளை இங்கு ஏற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. டி. பி. அமைப்பு இன்று முடிவு செய்யும்

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு கொள்வதா? இல்லையா? என்பது குறித்து எமது கட்சியின் செயலாளர் நாயகம் யாழ். நகரில் முகாமிட்டு ஆராய்ந்து வருகிறார். இது தொடர்பான முடிவு இன்று வெளியிடப்படும்.

ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலைப் பகிஷ்கரிப்பது தொடர்பாக நேற்று நடந்த

(7 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடுகளுக்கு காட்டவே அரசு தேர்தலை நடத்துகிறது

### ரெலோ தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், டிச. 22

''இன்றைய சூழலில் யாழ். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தமிழ் மக்கள் விரும்பவில்லை. தமிழ்க் கட்சிகளும் பெருமளவில் இதனை விரும்பவில்லை. ஆனால் அரசாங்கம் வெளிநாடுகளுக்கு ஒரு மாயை தோற்றத்தைக் காட்டுவதற்காக இத்தேர்தலை நடத்த வேண்டும் என்று பிடிவாதமாக நிற்கிறது.''

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்துக் கருத்து வெளியிட்ட ரெலோ அமைப்பின் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 5 ஆம் கட்ட உண்ணாவிரதம் நேற்று யாகப்பர் ஆலயத்தின் முன்றலில்

யாழ்ப்பாணம், டிச. 22

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகித் தகவல் தெரியாதுள்ளவர்களின் விவரங்களை வெளியிடக் கோரி கைதானோர், தகவல் தெரியாதோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் ஏற்பாடு செய்த 5 ஆம் கட்ட உண்ணாவிரதம் நேற்று புனித யாகப்பர் ஆலயம் முன்பாக நடைபெற்றது.

...நிலையத்தைச் சேர்ந்த அருட்திரு ஐ. பேர்னாட் அடிகளாரால் காலை 8.30 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிறிஸ்தவ குருமார் உட்பட 300 க்கு மேற்பட்டவர்கள் இந்த உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்திக்கும் போது, அவரிடம் சமர்ப்பிப்பதற்காக காணாமற் போனோர் தொடர்பான விவரங்களை நேற்றைய உண்ணாவிரதத்தில் வைத்துச் சேகரிக்கப்பட்டன.

நேற்று மாலை 3 மணியளவில் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து உரையாற்றினார்.

''எதிர்வரும் 29 ஆம் திகதி ஜனாதிபதியுடன் இடம்பெறும் சந்திப்பின் போது பலன் கிடைக்காது விட்டால் அரசியல் ரீதியான அழுத்தம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய கலாசாலை பரீட்சைகள்

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குரிய இறுதிப் பரீட்சை இம்மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது. முதலாம் ஆண்டு மாணவருக்கு உரிய அரசினர் பரீட்சை 1998 அம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் நடைபெறும்.

அனுமதி அட்டைகளை இதுவரை பெறாத மாணவர்கள், அலுவலக நேரத்தில் தத்தமது ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம் என கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளின் அதிபர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


★ கலண்டர் வகைகள்
★ டயறி வகைகள்

யாழ் நகரில் மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனையாகும் ஒரே இடம்

மக்மிலன் புத்தக நிலையம்

★ பாடசாலை உபகரணங்கள்
★ காகிதாதிகள்
★ கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்து மடல்கள்

இவை அனைத்தும் ஒரே இடத்தில்
மக்மிலன்
இல. 3, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். (சி/2452)


## கண்ணீர் அஞ்சலி

### தம்பு சிவபாதசுந்தரம்

மருதனார் மடம் வாணி உணவக உரிமையாளர் தம்பு சிவபாதசுந்தரம் அவர்கள் 17 - 12 - 97 அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த மனவருத்தத்தை தெரிவித்து அவருக்கு கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

மருதனார் மடம்
வர்த்தகர்கள்.
(சி/2449)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் இலையதம்பி குமாரசுவாமி J.P.

(இலைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 07 04 – 1921
மறைவு: 22 – 11 – 1997

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காயிருந்து நாட்டுக்கு நற்சேவை செய்து 22 - 11 - 1997இல் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கண்ணீர் அஞ்சலியை பிரசுரித்த அன்பு உள்ளங்கள், கடிதமூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

''கமலவாசா,''
ஆனைக்கோட்டை.
(சி/ 2448)

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிச. 22

அராலி திருச்சபையின் வருடாந்த நத்தார் இன்னிசை விழா இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு போதகர் யூட் சுதர்சன் தலைமையில் ஆலய திறந்தவெளி அரங்கில் நடைபெறும். (இ)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 22

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பிரதம மதிப்பீட்டாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் கொழும்பில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கின்றது.

இப்பணிக்கென யாழ்ப்பாணத்திலிருந்து செல்வோருக்குப் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம மதிப்பீட்டாளர்கள் யாவரும் இம் மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் தமது பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும்—

வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கும் கல்வி வலயம் ஒன்றின் பரீட்சைப் பிரிவில் தமது பிரயாணத் திகதியை உறுதி செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது. (இ-7)

## வெளிநாடு...

(முதலாம் பக்கத் தொடர்)

தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தேர்தலைக் காட்டி வெளிநாடுகளிலிருந்து பெருமளவு கடன்களைப் பெறலாம் என அரசு எதிர்பார்க்கிறது. எம்மைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்தின் ஆதரவு பெற ஒரு பொம்மை ஆட்சி உருவாவதைத் தடுக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

ஆகக் குறைந்தது ஒரு மாநில சுயாட்சியாவது வழங்காதது மட்டுமல்ல வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு தாயகத்தைக் கூறு போடுகின்ற இத் தீர்வுத் திட்டத்தை முற்று முழுதாகவும் திட்டவட்டமாகவும் எமது அமைப்பு நிராகரிக்கிறது.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தீர்வுத்திட்டத்தை நிராகரிப்பதற்கும் நாடு தழுவிய ரீதியில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும்வகையிலும் ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பாக கருதி தமது அபிலாசைகளை வெளிப்படுத்துமாறு தமிழ் பேசும் மக்களைஎமது அமைப்புக் கேட்டுக் கொள்கிறது'' எனவும் சிவாஜிலிங்கம் கூறினார்.

கூட்டத்தில் நடந்தவை பற்றிக் கேட்ட போது, கூடினோம்; பேசினோம்; பிரிந்தோம்; இவ்வாறு அவர் பதிலளித்தார். (இ-3-103)


வீடு விற்பனைக்கு

நச்சா வீதியில் கச்சேரி,
ஜோன் பொஸ்கோ
பாடசாலை அருகில்
மாடி வீடு
விவரங்களுக்கு:
1, முதலாம் ஒழுங்கை,
நீராவியடி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(51206)

லிபேட்டி
சினிமா
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
[illegible]
(51898)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பிரேமலோஜினி சிவகரன்

இணுவிலைச் சேர்ந்த திருமதி பிரேமலோஜினி சிவகரன் (படவரைஞர், கட்டட நிர்மாண திணைக்களம்) 21-12-97 அன்று காலமானார்.

அன்னார் திரு தி. சிவகரன் (தொழிநுட்ப உத்தியோகத்தர், கட்டட நிர்மாண திணைக்களம், திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும், திரு. செ. வேலாயுதபிள்ளை (ஓய்வு பெற்ற பதவி நிலை உத்தியோகத்தர், யாழ். உள்ளூராட்சி திணைக்களம்) திருமதி வே. திலகவதி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருநாவுக்கரசு, திருமதி திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மருமகளும், வே. பிரேமகுமார் (நீர்ப்பாசன பொறியியலாளர், கிளிநொச்சி), வே. பிரேமச்சந்திரன் (சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர், திருகோணமலை), வே. பிரேமரஞ்சன்(தொழிநுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்களம் திருகோணமலை), வே. பிரேமதயாளன் (ஆசிரியர், உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி), ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி. பி. சுகந்தி, திரு. தி. சிவானந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் பி. புராதனி, பி. மர்த்தனி ஆகியோரின் அன்பு மாமியும், திரு. திருமதி சிவசுப்பிரமணியத்தின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22 - 12 - 97 பிற்பகல் 3-00 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. சிவசுப்பிரமணியம்

59, கஸ்கிஸன் வீதி,
திருகோணமலை.
(சி/2450)

### திருமதி சுப்பையா கனகம்மா

மஞ்சத்தடி இணுவிலைச் சேர்ந்த திருமதி சுப்பையா கனகம்மா 21-12-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கருணாகரர் சுப்பையாவின் அன்பு மனைவியும், கருணானந்தன் (இளைப்பாறிய உள்ளூராட்சி சபை பிரதம எழுதுவினைஞர்), சச்சிதானந்தன, அழகானந்தன் (ஆசிரியர், யா/இணுவில் மத்திய கல்லூரி), திருமதி வடிவேலு சிவமணி, மகாதேவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, அமிர்தகௌரி, திரு த. வடிவேலு (குடியியல் அத்தியட்சகர், சப்புகஸ்கந்தை இ. மி. சபை, கொழும்பு.) கௌரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22-12-97) 12 00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சு. அழகானந்தன்
(மகன்)

மஞ்சத்தடி,
இணுவில்.
(52007)

### ஆறுமுகம் சந்திராசன் [ரவி]

காங்கேசன்துறையைச் சேர்ந்த ஆ. சந்திரராசன் (ரவி) 21-12-97 இல் அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22-12-97) பிற்பகல் 3 00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆறுமுகர் ஜெயதாஸ்
(பேபி)

பழைய முகவரி:
சந்தை வீதி, K K S
தற்போதைய முகவரி:
புகையிரத நிலையம் முன்பாக,
கோண்டாவில்.
(52008)

### இராசதுரை அரியரட்ணம்

(உரிமையாளர் அரியரட்ணம் பிறதர்ஸ், ஹற்றன்)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த இராசதுரை அரியரட்ணம 21- 12- 97 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் இராசதுரை அன்னரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், கொக்குவில் மேற்குமுருகமூர்த்தி கோயிலடி அரியரட்ணம் கலாவதியின் அன்புக் கணவரும், ஜீவிதா, சவீதா, இந்துஜன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவரத்தினம் துரையம்மா தம்பதிகளின் மருமகனும், விஜயரட்ணம், செல்வராசா (பேபி இரும்பகம் சுன்னாகம்) யோகேஸ்வரன் (சுவிஸ்) ஸ்ரீகாந்தன் (ஹற்றன்) சிறிசண்முகராசா (சிவா, அம்பாள் அழகுமாடம், யாழ்ப்பாணம்) கணேசு, ஜெயமலர், சிவராசலிங்கம், இந்திராதேவி ஆகியோரின் சகோதரரும், கணேசு (கணேசன் ரேடிங் கம்பனி, இணுவில்) சிவராஜலிங்கம் (A. S. S கோண்டாவில்) சத்தியதேவி (உரும்பிராய்) மகாலட்சுமி, ரஜனி (சுவிஸ்) ரதிதேவி (கொக்குவில்) ஜெகதீஸ்வரி, இராசலட்சுமி (கனடா), ரஞ்சினிதேவி (கனடா), புஸ்பராணி (கனடா), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வராசா(பேபி) சிவா
(சகோதரர்கள்)

தியேட்டர்லேன்.
இணுவில்,
[52002]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியத்துக்கு பதிலாக புதிய காப்புறுதித் திட்டம்

## அரசு ஆலோசிக்கிறது

கொழும்பு, டிச. 22

எதிர்காலத்தில் அரசாங்க சேவையில் சேர்க்கப்படும் அனைவருக்கும் — தற்போது அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்திற்குப் பதிலாக — புதிய காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு ஆண்டொன்றுக்கு சுமார் ஆயிரத்து 800 கோடி ரூபாவைச் செலவு செய்கிறது. ஓய்வூதியம் வழங்கும் முறையை ரத்துச் செய்யுமாறு உலக வங்கி தொடர்ந்து கொடுத்துவரும் அழுத்தம் காரணமாக அரசு இந்த மாற்றுவழியை நாடியுள்ளது எனத் தெரியவருகிறது.

தற்போது 7 லட்சத்து 35 ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் ஓய்வூதிய உரிமையுடன் பணியாற்றி வருகிறார்கள்.

அரசாங்கத்தின் புதிய திட்டம் குறித்து நிதி அமைச்சின் செயலாளர் பி. சி. பெரேராவிடம் கேட்டபோது "ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது திறைசேரிக்கு ஒரு பெரும் சுமையாகவே உள்ளது. ஆனால் அரசின் மாற்றுத் திட்டம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது" எனப் பதிலளித்ததாக 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது [ஐ-10]

### உடுவில் பிரதேச செயலர் பிரிவில்

## உதவிப் பணம் பெற மேலும் 347 பேர் தெரிவு

வலிகாமம் தெற்கு, டிசெ. 22

வலிகாமம் தெற்கு - உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவு பெறுவதற்கு மேலும் 347 பேர் அனுமதி பெற்றுள்ளனர்:

புதிதாக அனுமதி பெற்றவர்களும் ஏனையோரும் தத்தம் தபால் நிலையங்களூடாக நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவை இன்று திங்கட்கிழமை பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலக நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-152)

## 18 மாத நிலுவைப் பணம் ஓய்வூதியருக் குக்கிடைக்கும்

தென்மராட்சி, டிச. 22

ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த வாழ்க்கைச் செலவுப் படியின் 18 மாதங்களுக்கான நிலுவைத் தொகை ஜனவரி மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு நிலுவையை வழங்குமாறு சகல மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் ஓய்வூதியப் பணிப்பாளர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து—

1989 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதிக்கும், 1990 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட 18 மாதகாலத்துக்குரிய வாழ்க்கைச் செலவுப்படி நிலுவையான 4 ஆயிரத்து 680 ரூபா அடுத்த மாதம் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி 1988 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்படல் வேண்டுமென பணிப்புரை வழங்கியதை அடுத்து இக்கொடுப்பனவு காலத்திற்குக்காலம் நான்கு கட்டங்களில் வழங்கப்பட்டு தற்போது ஐந்தாம் கட்டத்தில் 18 மாதங்களுக்குரிய நிலுவைத் தொகை வழங்கப்படவுள்ளது. (ஐ-117)

## மிதிவெடி எச்சரிக்கை சுவரொட்டிகள்

வலிகாமம் தெற்கு, டிச. 22

மிதிவெடி அபாயத்தினை மக்களின் கவனத்துக்கு கொண்டுவருவதற்காக அரசாங்க அதிபரின் தலைமையில் இயங்கும் மிதிவெடி விழிப்புக் குழுவின் ஆலோசனையுடன் யுனிசெப் ஸ்தாபனம் சுவரொட்டிகளை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களூடாகவும் இச் சுவரொட்டிகள் விநியோகிக்கப்படவுள்ளன.

கிராம சேவையாளர் அலுவலகங்கள், சன சமூக நிலையங்கள் தபாலகங்கள், சந்தைகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் அவை ஒட்டப்பட வேண்டுமென யாழ். திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் கா. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஐ 152)

## பட்டதாரிகளின் ஓய்வூதியம் புதிய சம்பளத்திட்டத்தின் கீழ்

அச்சுவேலி, டிசெ. 22

1994-10-06 ஆம் திகதிக்குப் பின்பு ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு புதிய சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் அதிகரிக்கப்படும்.

பட்டதாரி ஆசிரியர்களுக்கு கல்வித்தகைமை சேவைக்காலம், தொழில் சார் தகைமை என்பவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு ஆசிரியர் சேவை வகுப்பு நிலைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படுகிறது.

புள்ளித்திட்ட அடிப்படையிலான கணிப்பீடுகள் 1994-10-06 ஆம் திகதி ஆசிரியர் சேவைத் திட்டம் நடைமுறைக்கு வந்தது முதல் நடைமுறைப் படுத்தப்படுவதால் பட்டதாரி ஆசிரியர்களின் சேவை வகுப்பு நிலை மாற்றப்பட்டு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

1994-10-06 ஆம் திகதியில் உள்ள புதிய சேவைத் தரத்திற்கு ஏற்ற முறையில் ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் ஓய்வூதியமும், பணக்கொடையும் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான தீர்மானங்களை கல்வி உயர் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது. (ஐ-11)

## யாழ். இலங்கை வங்கி: வெற்றிடங்கள் நிரப்பப்படும்

கொழும்பு, டிச. 22

யாழ். மாவட்டத்தில் இயங்கும் இலங்கை வங்கி கிளைகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கென அடுத்த மாதமளவில் விசேட போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது இதற்கான முடிவு வங்கி அதிகாரிகள் மற்றும் அரச தரப்பினர் மத்தியில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் செயற்படும் இலங்கை வங்கிக் கிளைகளில் 67 வெற்றிடங்கள் உள்ளன என்றும் இதனால் வங்கிக் கடமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதேவேளை ஏனைய மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்த வங்கி ஊழியர்கள் பலர் மீண்டும் பழைய இடங்களுக்குத் திரும்பவில்லை எனவும் தெரியவருகிறது.

யாழ். மாவட்ட தொழில் வங்கி மூலம் விண்ணப்பங்களைத் தெரிவுசெய்து போட்டிப் பரீட்சை நடத்த திட்டமிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஐ 10)

## வடிசாலைகளைப் புனரமைக்க 35 இலட்சம் ரூபா கிடைக்கும்

தென்மராட்சி, டிச. 22

யாழ். மாவட்டத்தில் இக்கம், சங்கானை, வரணி ஆகிய இடங்களில் உள்ள வடிசாலைகள் 35 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவற்றினைப் புனரமைப்புச் செய்வதற்கு மேற்கண்ட நிதியை ஒதுக்கீடு செய்து தருவதாக ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் அண்மையில் யாழ். செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அக் கலந்துரையாடலிலேயே இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சங்கானை, வரணி ஆகிய இடங்களில் உள்ள வடிசாலைகளுக்கு லைசென்ஸ் பெற்றுத் தரப்படுமெனவும், இக்கம் வடிசாலையிலிருந்து அரசிற்கு வரியாக செலுத்த வேண்டிய பல லட்ச ரூபாவினை ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு ரத்துச் செய்துதருவதாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது

வடிசாலைகள் புனரமைப்புச் செய்யப்பட்டு அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவை வரிப்பணம் ரத்துச் செய்யப்படுமாயின் யாழ். மாவட்ட பனை தென்னை வள சங்கங்கள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடி ஓரளவு தீர்ந்து விடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## பீரிஸ்- ரணில் சந்தித்து நீண்டநேரம் பேச்சு

கொழும்பு டிச. 22

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் அமைச்சர் ஜீ. எல். பீரிஸும் கடந்த வாரம் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் சந்தித்து நீண்டநேரம் உரையாடினர். எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் சந்திப்பின் போது உத்தேச அரசியல் அமைப்புத்திருத்தம் பற்றிய விடயம் முக்கிய இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்தின் உத்தேசத் திட்டம்தொடர்பாக ஐ.தே. கட்சியின் மாற்றுத் திட்டத்தை ஜனவரி மாத நடுப்பகுதியில் கையளிப்பதாக ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் பீரிசுக்குத்தெரிவித்துள்ளார். [ஐ -10]

## விமானச் சிதைவைத் தேடிச் சென்ற கிரீஸ் விமானமும் வீழ்ந்தது!

எதென்ஸ், டிச. 22

கடந்த வியாழனன்று கிறீஸின் வடபகுதியில் பனி மலை இடுக்குகளில் வீழ்ந்து நொறுங்கிய உக்ரைன் நாட்டு விமானத்தின் சிதைவுகளைத் தேடிடும் பணியில் ஈடுபட்ட கிறீஸ் நாட்டு விமானப் படையின் சரக்கு விமானம் ஒன்று நேற்று முன்தினம் எதென்ஸின் வடபகுதியில் வீழ்ந்து நொறுங்கியது. அதிலிருந்த ஐந்து பேர் உயிரிழந்தனர்.

உக்ரைன் தலைநகர் கீவ்வில் இருந்து வந்து கொண்டிருந்த விமானம் கிறீஸின் வடபகுதியில் சிலோனிக்கா என்ற இடத்தில் மலைப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியது.

விமானச் சிதைவுகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட குழுக்கள் நேற்று முன்தினம் விமானம் வீழ்ந்த இடத்தைச் சென்றடைந்தன.

இரண்டு மலைகளுக்கு இடையிலான இடுக்கில் முற்று முழுதாக எரிந்த நிலையில் விமானம் காணப்பட்டது.

கறுப்புப் பெட்டியையும் கருகிய உடல்களையும் மீட்கும் முயற்சிகள் ஞாயிறு காலை வரை நடைபெற்றன.

இதேவேளை —

இந்தோனேசியாவின் சுமாத்திரா அருகே சதுப்பு நிலப்பகுதியில் வீழ்ந்து நொறுங்கியசிங்கப்பூர் "சில்க் எயர்" நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தின் சிதைவுகளை சேற்றுப் பகுதியில் மீட்புக் குழுக்கள் கண்டுபிடித்துள்ளன.

இந்த விமானம் வீழ்ந்து நொறுங்குவதற்கு முன்னர் வெடிச் சத்தம் கேட்டதாக கிராமவாசிகள் கூறியுள்ளனர், விமானத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்றதா என்ற சந்தேகத்தை இது கிளப்பியுள்ளது. (ஐ)

## 10 ஆயிரம் செம்மறி ஆடுகள் மரணம்

புதுடில்லி, டிச. 22

தமிழ்நாடு தூத்துக்குடியில் செம்மறி ஆடுகளுக்கு ஒருவித தொற்று நோய் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த நோயினால் இதுவரை சுமார் 10 ஆயிரம் செம்மறிகள் இறந்துள்ளதாக பி. ரீ. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் [illegible] நோய் இன்னும் இனங் காணப்படவில்லை. (ஐ)

## அல்ஜீரியாவில் மீண்டும் படுகொலைச் சம்பவங்கள்

அல்ஜியர்ஸ், டிசெ. 22

அல்ஜீரியாவில் மீண்டும் படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தலைநகர் அல்ஜியர்ஸுக்கு அருகே ஒரு கிராமத்தில் நேற்று முன்தினம் 30 பேர் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து இரு நாள்களில் அங்கு கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆகியுள்ளது.

### உலக அரங்கில்

இஸ்லாமியத்தீவிரவாதிகள் நடத்தி வருவதாக அரசாங்கம் குற்றஞ் சாட்டிவரும் இப்படுகொலைச் சம்பவங்கள் அல்ஜீரியாவில் நீண்ட தொடர் கதையாக நீடிக்கிறது.

1992இல் இஸ்லாமிய இரட்சணிய முன்னணி என்ற அமைப்பு தேர்தலில் வெற்றி பெறுவதைத் தடுக்க இராணுவம் தலையிட்டதைத் தொடர்ந்து அங்கு நடைபெற்று வரும் இத்தகைய படுகொலைகளில் இதுவரை 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொலையுண்டுள்ளனர். (ஐ)

## அருந்ததி ராய் கொழும்பில்

கொழும்பு, டிச. 22

"சிறிய" விடயங்களின் கடவுள் என்ற தனது முதல் நாவலுக்காக பிரிட்டிஷ் உயர் விருதான "புக்கர்" விருது பெற்ற இந்திய எழுத்தாளர் அருந்ததி ராய் இலங்கையில் விஜயம் மேற்கொண்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டன

ஜானகி ரடனசிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (765950996V) விசேட அடையாள அட்டையும், மாணவ அடையாள அட்டையும் யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் T பொன்னம்பலம், இல. 68, ஆறுகால்மடம், பழம்றோட் ஆனைக்கோட்டை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்.
[51994]

### வீடு விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு வாகையடிச் சந்திக்கு அண்மித்து 8 பரப்புடன் மா, பலா, தென்னை, பனை, வேம்பு முதலிய பிரயோசனங்களை உள்ளடக்கிய வீடும், வளவும் உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ. நடேசன், கோட்டடி, சாவகச்சேரி:
(சி/2443)

### உடன் விற்பனை

ஒரு மாதம் வளர்ச்சி அடைந்த பிரிமா பிறவுண் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும், அழகிய பல இன கலர் வளர்ப்பு மீன்களும் (கோல்ட்பிஸ்) உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, மானிப்பாய்.
(51985)

### SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலம் பேசப் பயில (ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதி) புதிய வகுப்பு ஆரம்பம். ஆசிரியர்: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்
[51997]

### யாழ்ப்பாணத்தில்

அந்த ஆறு மாதங்கள் வெளிநாடுகளில் உள்ள உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு அனுப்புவதற்கு பொருத்தமான நூல், அராலியூர் ந சுந்தரப்பிள்ளை எழுதியது. யாழ். நகரில் எங்கும் கிடைக்கும். ரூபா 50.
[51998]

### மகாதேவா ஜோதிடம்

''வியாழமாற்றம்'' புத்தகம் எங்கும் கிடைக்கும். சோதிடரை-கடை-626, பருத்தித்துறை வீதி (நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக) காலை 10 மணி தொடங்கி பிற்பகல் 2 மணிவரையும், ஏனைய நோங்களில்வீடு 140. செல்லர் வீதி (கல்வியங்காடு) இடத்திலும் தினசரி சந்திக்கலாம்.
[சி/2426]

# நன்றி நவிலல்

## அமரர் கந்தையா அருணாசலம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கார்த்திகைக் கார்த்திகையாம் தீபத்திருநாளில் (13 12-97 அன்று) அருணாசலேஸ்வர ஜோதியுடன் சங்கமமான எமது இல்லத் தலைவர்

## கந்தையா அருணாசலம்

(முன்னாள் உப-அதிபர், யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.)

அவர்களின் ஈமக் கிரியைகளில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவியவர்களுக்கும் மலர் வளையங்கள், மாலைகள், அஞ்சலிப் பிரசுரம், அருமையான, ஒப்புவமையற்ற இரங்கலுரை போன்றவை நிகழ்த்திச் சிறப்பித்த அன்னாரின் ஈடு இணையற்ற அன்புக்குப் பாத்திரமான பழைய மாணவர்கள் ஆகிய யாவருக்கும் எமதுமனப்பூர்வமான இதயங் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

- குடும்பத்தினர்

(51993)

# ஓராண்டு நினைவஞ்சலி



## துரைராஜா பிரதீஸ் (தீசன்)

மலர்வு: 03-02-1978 உதிர்வு: 02-01-1997

திதி: 22-12-1997

தீண்டாத தீபம் ஒன்று
தீசன் என்னும் பெயர் கொண்டு
தேசம் விட்டுப் போனது எங்கு?
மறைந்தும் மறையாத மாணிக்கமே...
நீ சென்று ஓராண்டு ஆனதடா இன்று
உன்... தாயவளின் தணியாத கண்ணீர்
தரணியில் ஓடுதடா...
இதற்காகவாவது ஒரு பதில் கூறாயோ?
பெற்றவரும் உற்றவரும் உன்னோடு கல்வி
கற்றவரும் தனித்துப் போக...
நீ மட்டும் எதற்காகவடா
இரு உறவு கூடிப் போனாய்
சென்று வா எம் இளைய மகனே...
மௌனமாகிப் போகலாம் உன் அசைவுகள்—ஆனால்
மரணமாகப் போவதில்லை உன் நினைவுகள்.

க. துரைராஜா குடும்பத்தினர்

குமரகோட்டம்,
கோட்டைக்காடு,
மல்லாகம்.
(51939)

# யாழ். வட்ட லியோ கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி-1997

மேற்படி போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இன்று [22-12-97] ஆகும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை இல. 61, ஈச்சமோட்டை வீதியில் அமைந்துள்ள யாழ். உதைபந்தாட்டச் சங்க செயலகத்தில் மாலை 5 மணிக்கு முன் ஒப்படைக்கவும். நாளை (23-12-97) செவ்வாய் காலை 10 மணிக்கு மேற்படி முகவரியில் அமைந்துள்ள செயலகத்தில் போட்டிகளுக்கான அட்டவணை தயாரிக்கப்படும் என்பதை பங்கு பற்றும் கழகங்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஒவ்வொரு கழகத்தில் இருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி அழைக்கப்படுகின்றார்.

லியோ. ரி. அரவிந்தன்,
செயலாளர்,
போட்டிக்குழு.

விளம்பர அன்பளிப்பு:

**பி. ஜெ. பர்னாண்டோ,**
251, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2415)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 23 — 12 — 1975

மறைவு: 18 — 12 — 1996

## செல்வன் கந்தையா விஜயானந்தன்

(மீசாலை வடக்கு)

திதி: 22—12—1997 திங்கட்கிழமை

பூவாகிப் பிஞ்சாகி காயாகிக்
கனியுமுன்னே காலன் — உன்னை
கடிதே பறித்தெடுத்தான் பார்த்திருக்க
ஆண்டு ஒன்று பறந்ததன்றோ!
பரிதவித்து நிற்கின்றோம் பாரினிலே
பாச நினைவுகளோ நெஞ்சினிலே!

தந்தை, தாய், சகோதர
சகோதரிகள், மைத்துனர்மார்.

சியாமளா மில் ஒழுங்கை,
மீசாலை வடக்கு,
மீசாலை.
(51896)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 28 — 10 — 1901

உதிர்வு: 02 — 01 — 1997

## சின்னப்பு சிவக்கொழுந்து

அபரபட்சம் அட்டமி திதி: 22-12-1997

எம் குடும்ப விருட்சத்தைத் தாங்கி நின்ற விழுதே!
எமக்கு நல்ல கல்வியூட்டி நல் வழிகாட்டி நின்ற கலங்கரைவிளக்கே!
ஐயா! கண்ணெதிரே நின்ற உங்கள் திருமுகம் எம் நெஞ்சை விட்டகலாதிருக்கிறது.
நீங்கள் கதைகள் கூறி மகிழ்ந்தது எம் காதில் இன்றும் கேட்கிறது.
பொல்லாத காலனால் நீங்கள் காலமாகி
ஆண்டொன்று சென்றாலும், ஆறாது எம் இதயம்.
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பிள்ளையார் கோயிலடி,
தாவடி.
(49878)

# தொழிநுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்

# இறுதிப் பரீட்சைகள் - 1997

எமது தொழிநுட்பக்கல்லூரியின் கீழ்க்காணும் பயிற்சிநெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகளும், அவை ஆரம்பமாகும் திகதிகளும் கீழே தரப்படுகின்றன. இவற்றுக்கான நேரசூசிகளை கல்லூரி அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம். மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை 31-12-97 அன்று அவ்வப்பகுதித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## விவரம்

| பயிற்சி நெறிகள் | ஆரம்பமாகும் திகதி |
|---|---|
| 1. வியாபாரக் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திரம் (NCBS) | 06—01—1998 |
| 2. கணக்கீட்டுத் தொழிநுட்பவலருக்கான தேசிய தராதரப் பத்திரம் (N CAT) | 08—01—1998 |
| 3. பொறிக்கைப்பணியாளர் தேசிய தராதரப் பத்திரம் (NCECP) | 08—01—1998 |
| 4. ஆங்கில தேசிய தராதரப்பத்திரம் (N C E) | 13—01—1998 |
| 5. சுருக்கெழுத்தாளர் தேசிய தராதரப் பத்திரம் (N. C. Steno) | 15—01—1998 |

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2416)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜு ஸ்ரோர்ஸ்

அழைக்கிறது.

நத்தார் புதுவருடத்துக்குரிய

- ★ சோடனைப் பொருள்கள், பலூன்கள்
- ★ பாலன் பிறப்பு செட்
- ★ விளையாட்டுச் சாமான்கள்
- ★ காற் பந்து, கைப்பந்து வகைகள்
- ★ சில்வர் சாமான்கள்
- ★ எசென்ஸ் வகைகள்
- ★ பாடசாலை உபகரணங்கள்

மேலும் பல பொருள்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

ராஜு ஸ்ரோர்ஸ்

67, 69 கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (51992)



# மொத்த விற்பனையாளர்களே!

எங்களிடம் மொத்தமாகவும், சில்லறைகளாகவும் சகலவிதமான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், பாடசாலை மாணவர்களுக்கான றோயில், கிறாப், செய்முறை, அப்பியாசப் புத்தகங்கள் - 40 - 400 பக்கங்கள் வரை, நத்தார். புதுவருட, பிறந்த நாள் வாழ்த்துமடல்கள், பேப்பர் வகைகள், பேனா வகைகள், உலகப் பிரசித்தி பெற்ற வோல்ற் பெயின்ற், மற்றும் ''ராஜா'', ''அமுதா'' ''கொலம்பியா'' ஆகிய டீசல் இயந்திரங்களின் உதிரிப்பாகங்களும், அவற்றுடன் நெல் குற்றும் இயந்திரம், மாஅரைக்கும் இயந்திரம், மிளகாய் அரைக்கும் இயந்திரம் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும் கிடைக்கும். இவை தவிர உங்களுக்கு எந்தவகையான உதிரிப்பாகங்கள் தேவை என்றாலும் எங்களை நாடுங்கள்.

நிர்வாகி, ALL CEYLON DISTUBUTORS

சமுத்திரா ரேட்ஸ் லிமிடெட்

(117)NO. 23/2, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம். (51986)



## நத்தார் புதுவருட தினங்களை முன்னிட்டு

# பெருமளவு மலிவு விற்பனை

சிறுவர்களுக்கான சான்டில்ஸ்

கொழும்பு விலையில்

கூடுதலாக கொள்வனவு செய்வோருக்கு கொழும்பு விலையிலிருந்து 10 வீதம் கழிவு வழங்கப்படும்.

நாடுங்கள்:

யாழ். நகரில்

பியூட்டி சூ பலஸ்

பஸ் நிலையம் (769, தரிப்பிடம் முன்பாக)

யாழ்ப்பாணம்.

வண்ணக் காலணிப் பூங்கா,

பரமேஸ்வராசந்தி,

திருநெல்வேலி. (51988)



# தேவை

உரும்பிராயில் மீண்டும் ஆரம்பமாக உள்ள தொழில் நுட்பக்கல்லூரிக்கு கீழ் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ General Clerk
- ★ English / ★ Tamil ] Typing Instructors
- ★ மனையியல்வகுப்புக்கள் Instructors

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

29, 2nd Cross Street,

Jaffna (51972)



# தளபாட மாளிகை

சியெஸ்டா, ஆர்ப்பிபோம் ரக மெத்தைகள், தரமான பஞ்சு NO: 1, C. P. P. ரக கண்ணாடிகள் (முகம்பார்க்கும்), அலுவலகம் மற்றும் வீட்டுத் தளபாடங்கள்.

யாவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

ஹட்ஸ்சன்ஸ் தளபாட மாளிகை

63, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(மனோகராச் சந்தியிலிருந்து யாழ். இந்துக்கல்லூரி பக்கம் 100 யார் தூரத்தில்.) (51990)


## வன்னியில் எம். ஜி. ஆர் நினைவு தின வைபவங்கள்

வவுனியா, டிச. 22

முன்னாள் தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் 10 ஆவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் கடந்த வார மத்தியில் வன்னியில் பல இடங்களில் நடைபெற்றன.

துணுக்காய், கல்விளான் குளம் பகுதிகளில் பொதுக் கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(ஐ-164)

## யாழ்ப்பாணத்துக்கு தேசிய கொடிகள்

கொழும்பு, டிசெ. 22

யாழ். குடாநாட்டில் விற்பனை செய்வதற்காக சதொச நிறுவனம் 5 ஆயிரம் தேசியக் கொடிகளை கொழும்பிலிருந்து அனுப்பி வைத்துள்ளது.

நத்தார், புதுவருடப்பிறப்பு கொண்டாட்டங்களை ஒட்டி யாழ்ப்பாணம் உட்பட நாட்டிலுள்ள அனைத்துக் கிளைகளுக்கும் போதுமான அளவில் புடைவைகள் அனுப்பப்பட்டுள்ளன என அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)


# தேவை

3—8 வரையான வகுப்புக்களுக்கு கற்பிப்பதற்கு ஆர்வமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

BOND

யாழ்ப்பாணம். (51995)



# பிரெஞ் மொழி

எழுத, பேச, வாசிக்க அடங்கலாக 4 மாத பயிற்சி

by:

ஸ்ரீ இந்திரகுமார் (CAP)

ஆரம்பம்: 02-01-1998

காலை 9 மணி

★ தபால் மூலமும் ஏற்கக் கூடியது.

APSS, 116A 2/1

(2-ஆம் மாடி)

காலிவீதி, வெள்ளவத்தை.

T.P. 596547 (51534)



# ஆனந்தா புத்தாண்டு நாள்காட்டி - 1998

- ▶ நாள்தோறும் நட்சத்திரம், திதி, யோகம் முதலிய பஞ்சாங்கக் குறிப்புகள்,
- ▶ கொண்டாட்ட தினங்கள். அரச வங்கி வர்த்தக விடுமுறைகள்.
- ▶ அஞ்சல் கட்டண விபரங்கள். பெரியார் நினைவு தினங்கள்.
- ▶ ஒரு முக கலண்டர். புதிய வாய்ப்பாடுகள்.
- ▶ மற்றும் முகவரிகள், கொடுக்கல், வாங்கல் எழுதுவதற்கான பக்கங்கள் முதலிய சிறப்பு அம்சங்களையும் கொண்டது. ▶ இத்தனைக்கும் விலை ரூபா 30 மட்டுமே!

விபரங்களுக்கு:- ஆனந்தா புத்தகசாலை

இல. 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.

(சி/2438)


## வடமராட்சி கிழக்கில் 50 பேருக்கு வீட்டுத்தோட்ட உபகரணம்

வடமராட்சி கிழக்கு வீட்டுத்தோட்ட செய்கையாளர்களில் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு வீட்டுத்தோட்ட உபகரணம் வழங்கப்படவுள்ளது.

இந்த உபகரணங்களை வழங்குவதற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரமாண அடிப்படையிலான மூலதன அபிவிருத்தி நிதியில் இருந்து ரூபா 25 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் சி. பசுபதி தெரிவித்தார்.

[ஐ-171]


# 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 16 | 22 |
| 03 | 12 |
| 1927 | 1974 |

அமரர் கனகாம்பிகை சபாரத்தினம்

அன்பெனும் உருவொன்று அன்னையாய்
வடிவெடுத்து
பண்போடு பாசத்தையும் பரிவுடன் ஊட்டிவிட்டு
கண்போன்ற கல்வியை நாம்கற்றறிய முனைகையிலே
எம்மை
மண்ணுலகில் தந்தையுடன் பரிதவிக்க விட்டு விட்டு
நீங்கள்
விண்ணுலகம் சென்று இன்று இருபத்து நான்கு
ஆண்டம்மா!
விடிவெள்ளியாய் நின்று என் றென்றும்
வழிகாட்டுவாய் தாயே!

—குடும்பத்தினர்.

'திலக வாசம்'
தபாலக வீதி,
சாவகச்சேரி.

(சி/2446)



# 13 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



| அன்னையின் மடியில் | அரக்கனின் பிடியில் |
|---|---|
| 09 | 22 |
| 12 | 12 |
| 1959 | 1984 |

அமரர் அமிர்தலிங்கம் செல்வக்குமாரன் (கிச்சி)

(முன்னாள் ஆங்கில உதவி ஆசிரியர், மன்/ நறுவிலிக்குளம் றோ.க.த. பாடசாலை, மன்னார்)

அன்பின் பிறப்பிடமே கிச்சி
பாசத்தின் ஒளிவிளக்கே கிச்சி
பண்பின் சிகரமே கிச்சி
மாணவரின் கல்விப் பசிதீர்க்க
கல்வியைத் தந்தனையே
எமது அன்புப் பசிதீர்க்க
அன்பைத் தந்தனையே
காலனின் பசிதீர்க்கத் துணிந்தனையேனோ?
நீ பிரிந்து சென்று பதின் மூன்றல்ல
பதின் மூவாயிரம் ஆண்டுகள் தான் ஆனாலும்
ஓயாது எம்துயர்.

என்றும் உன்பிரிவால் துயருறும்:

அம்மா, ஐயா, அண்ணன்மார்,
தம்பிமார், அக்காமார், தங்கை, மைத்துனர்மார்,
மருமக்கள், செந்தூரன் [கிச்சி], செல்வக்குமார்,
சசிகலா [டோட்டி], சர்மிளா [பியூட்டி]

த. அமிர்தலிங்கம்,
வடக்குத் தெரு,
தொண்டமனாறு.
தற்போதைய முகவரி:
தறிதியடி, வீ. எம். றோட்,
பருத்தித்துறை.

(52003)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# களுத்துறை படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்துக!

## லண்டன் தமிழர்கள் பிரதமருக்கு மகஜர்

கொழும்பு, டிசெ. 22

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க்கைதிகளில் மூவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படுவதுடன் இது குறித்து கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று கோரி லண்டனிலுள்ள மனித உரிமைகளுக்கான தமிழ் நிலையம் பிரிட்டிஷ் அரசிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி களுத்துறை சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மூவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை ஆட்சேபித்து டவுனிங் வீதியிலுள்ள பிரிட்டிஷ் பிரதமரின் வாசஸ்தலத்திற்கு வெளியே மேற்படி மனித உரிமைகளுக்கான தமிழ் நிலையத்தைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்டோர் கூடி விழிப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலை குறித்து சர்வதேச விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் தமிழ்க் கைதிகள் கொலை செய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதுடன் அவசர காலச் சட்டத்தையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் வாபஸ் பெறுவதன் மூலம் அனைத்து அரசியற் கைதிகளையும் விடுதலை செய்யவும் இலங்கை அரசை பிரிட்டன் வலியுறுத்த வேண்டும் என்று அந்த மகஜரில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஐ 01)

## கிறிஸ்மஸ் ஒளி விழா

அரியாலை, டிசெ. 22

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் பணியாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்துநடத்தும்கிறிஸ்மஸ் ஒளிவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் சங்கத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கே. திருநாவுக்கரசு ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எஸ். திருச்செல்வம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். சங்கத்தின் நெறியாளர் குழு உறுப்பினர் சி. தார்சீசியஸ் சிறப்புரையாற்றுவார். இறுதியில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (ஐ-17)

## மானிப்பாய் கிழக்கில்

# தையல் டிப்ளோமா நெறியில் 40 பெண்களின் பயிற்சி நிறைவு

வடக்கு- கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மானிப்பாய் கிழக்கில் நடத்தப்பட்டு வரும் ஒரு வருட கால டிப்ளோமா தையற் பயிற்சி நெறி இம் மாதத்துடன் முடிவடையவுள்ளது.

இங்கு பயிற்சி பெற்றுவரும் 40 இளம்பெண்களின் தையல் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி இம் மாத இறுதியில் நடத்தப்படவுள்ளது. இவர்களுக்கு விரைவில் பரீட்சை நடத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர் அங்கிருந்து இவர்களுக்கான சான்றிதழ்கள் கிடைக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சியைப் பூர்த்தி செய்து பரீட்சையில் சித்தியடையும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களுக்கு சுயதொழில் முயற்சியை மேற்கொள்ளுவதற்கு வசதியாக மானிய மாகவோ அல்லது கடன் அடிப்படையிலோ தையல் மெஷின்களை வழங்கி உதவுமாறுசண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித்திணைக்கள பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ-135)

## நீண்டகாலத்தின் பின்

# வடமராட்சி கிழக்கிற்கு பாண் விநியோகம்

கடந்த சுமார் ஒன்றரை வருடகாலத்தின் பின் வடமராட்சி கிழக்குமக்களுக்கு பாண் கிடைத்துள்ளது.

வடமராட்சிப் பகுதியில் இருந்து பாண் எடுத்துச் சென்று வடமராட்சி கிழக்கில் விநியோகிக்க அனுமதி கிடைத்துள்ளது. அதனையடுத்து அப் பகுதி மக்கள் தற்போது பாண் பெற முடிகிறது. ஓர் இறாத்தல் பாண் 12 ரூபாவாக இங்கு விற்பனையாகிறது.

இராணுவ நடவடிக்கைகளின் பின் வடமராட்சி கிழக்கில் மண் அணைக்கு வெளியே உள்ள பகுதிகளுக்கு மா விநியோகம் நடைபெறாததால் அங்குள்ள பேக்கறிகள் மூடப்பட்டன. அதனையடுத்து அங்கு பாணுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. காலப்போக்கில் அங்கு முற்றாகவே பாண் பெற முடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது பருத்தித்துறையில் இருந்து வல்லிபுரக் கோயில் காவலரண் ஊடா மணற்காடு முதல் செம்பியன்பற்று வரையான பகுதிகளுக்கு பாண் விநியோகிக்கப்படுகிறது. ( -36)

# அட்டைகளைப் பயன்படுத்தும் தொலைபேசிகள் கிடைக்கும்

யாழ்ப்பாண, டிச. 22

யாழ். மாவட்ட தொலைபேசிப் பாவனையாளர்களின் நன்மை கருதி அடுத்த மாத இறுதிக்குள் அட்டைகளைப் பயன்படுத்தும் ''பே போன் காட்'' தொலைபேசிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

''பே போன் காட்'' தொலைபேசிக்கான அட்டைகள் வெகு விரைவில் யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விற்பனைக்கு வரலாமென அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் நாணய தொலைபேசிகள் பொருத்தப்பட்டதைத் தொடர்ந்து அதிகாலை முதல் மாலை வரை பாவனையாளர்கள் அவற்றின் அருகே குழுமியிருப்பதை அவதானிக்க முடிகிறது. (ஐ-86)

# ஆள் பிணையில் செல்ல மூவருக்கு நீதிவான் அனுமதி

அனுராதபுரம் மாவட்ட நீதிவானால் பிடியாணை விடுக்கப்பட்டிருந்த யாழ். வாசிகள் மூவரையும் ஆள் பிணையில் செல்வதற்கு மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் அனுமதி வழங்கினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வடபகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் 8-8-97 இல் ஆஜர் செய்யப்பட்டிருந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தேவா ரமேஸ், கணேசு ரவிக்குமார், கணேசமூர்த்தி தங்கராசா ஆகிய மூவரும் மறுதவணைக்கு அங்கு சமுகமளிக்காதபடியால் அனுராதபுரம் மாவட்ட நீதிவான பிடியாணை பிறப்பித்திருந்தார்.

இம்மூவரும் மீண்டும் சுன்னாகம் பொலீஸாரால் மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் எஸ். சபாநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் பொன். பூலோகசிங்கம், எம். கே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் இவர்கள் வடபகுதிக்கும் நாட்டின் ஏனைய பகுதிக்கும் இடையிலானபோக்குவரத்துசீரின்மை காரணமாகவே உரிய திகதியில் அனுராதபுரம் நீதிமன்றில் ஆஜராக முடியாமல் போனதாகவும் —

இவர்களைப் பிணையில் விடுமாறும் —

அடுத்த தவணையில் இவர்கள் நிச்சயமாக அனுராதபுரம் நீதிமன்றில் ஆஜராகுவார்கள் என்றும் — தெரிவித்ததை அடுத்து நீதிவான் மேற்கண்டவாறு அனுமதி வழங்கினார். (இ 4)

# திருநெல்வேலியில் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிச. 22

திருநெல்வேலி கிழக்கு, தெற்குப் பகுதிகளில் அண்மைக் காலங்களாகதிருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் ஆலயத்திற்குப் பின்புறமாகவுள்ள இலங்கை மத்தியவங்கியின் முன்னாள் ஊழியர் ஒருவரின் வீட்டுக்குள் கூரை பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

வானொலிப்பெட்டி, சுவர் மணிக்கூடு, கைக்கடிகாரங்கள், மின் உபகரணங்கள் மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியவை திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த வாரம் திருநெல்வேலி நாவலடி வீதி, அம்மன் வீதி ஆகிய பகுதிகளிலும் சிறு சிறு திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றன. (இ-7)

## உத்தேச தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம்

# தமிழ்க் கட்சிகளை வழி நடத்தும் பொறுப்பு குடாநாட்டு வாக்காளர்களிடமே உண்டு

இரு வேறு இனங்கள் வாழும் நாட்டில் ஓர் இனத்தால் அந்த மண்ணுக்குரியதாக எழுதப்பட்ட, சட்டப் புரட்சி மூலம் கொண்டுவரப்பட்ட அரசமைப்பை மற்ற இனம் ஏற்றுக்கொள்ளாவிடில், அதுவும், இருவேறு இன மக்களுக்காகவும் என எழுதப்பட்ட அரசமைப்பு ஓர் இனத்தால் ஏற்றுக் கொள்ளப்படாவிடில், புதுமையான நிகழ்ச்சி எழுகின்றது.

இறைமையை மீளப்பெற்ற தமிழ் மக்கள், ஆட்சியுரிமையைப் பெற விழைகின்றார்கள். மூதறிஞர் செல்வநாயகம் இதனை அறிவித்தார். 1976 பெப்ரவரி 6ஆம் நாள் காங்கேசன்துறை இடைத் தேர்தலில், சிங்கள அரசுக்குச் சவால் விட்டு, சிங்கள அரசைத் தோற்கடித்த பின், தமிழ் மக்களின் விடுதலை முயற்சியை அறிவித்தார்; தேசிய பேரவைக்குச் சென்றார். தமிழ் மக்கள் விடுதலை பெற்ற இனமாக வாழ்வார்கள், ஆட்சியுரிமையைப் பெறுவதே அவர்களின் நோக்கம் என்று தெரிவித்தார்.

1972, 1978 அரசமைப்புகளுக்கு இசைவு கொடுக்காததன் மூலமும், சிங்கள நாட்டினம் தயாரித்த அரசமைப்புகளையும் அவற்றுக்குக் கொண்டு வரப்பட்ட திருத்தங்களை எதிர்த்து ஏற்றுக் கொள்ளாததன் மூலமும், தமிழ் நாட்டினத்தின் ஆட்சியுரிமை சிங்கள நாட்டினத்திடம் தாரைவார்த்துக் கொடுக்கப்படவில்லை. 1978 ஆம் வருட அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் கூட அதற்கு விதிவிலக்கல்ல. தமிழ்பிரதிநிதிகள் யாரும் அப்போது நாடாளுமன்றத்தில் இடம் பெற்றிராமையே அதற்குக் காரணம்.

அடிப்படையான அந்த நிலைப்பாட்டிற்கு முடிவுகட்ட முனைகின்றது சந்திரிகா அம்மையார் முன்வைத்திருக்கும் [illegible] உத்தேச புதிய அரசமைப்பு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுடன் இணைந்ததாக அமைவதே அதற்குக் காரணம்.

அரசியல் தீர்வில் அதிகாரப் பரவலாக்கல் அலகு தமிழர் தாயகக் கோட்பாடான வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்த ஒரே பிராந்தியமாக அமைதல் வேண்டும் என்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டவர்களாக ஒரே குரலில் வலியுறுத்தி வருதால், தமிழ் அரசியல் வட்டாரத்தில் வேற்றுமையைஉருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதே யாழ். குடாநாட்டில் அரசு நடத்த முனையும் உத்தேச உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலாகும்.

தமிழினத்தை அரசியல் படுகுழிக்குள் தள்ளுவதற்கு அரசு மேற்கொள்ளும் இச் சதித் திட்டத்துக்கு இரை போகாது

## வாசகர் திருமுகம்

தமிழினம் காக்கப்படுமா? இத் தேர்தல்களில் பங்குபற்றாது ஒதுங்கிக் கொள்வதன் மூலமே இப்பேராபத்தைத் தவிர்க்க முடியும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. தமிழ் அரசியல் கட்சிகளிடையே தேர்தலை முன்னிட்டு ஒற்றுமை குலைந்தால் அதனால் தமிழினத்துக்கே தலைகுனிவு.

மூதறிஞர் தந்தை செல்வாவின் பிறந்த நூற்றாண்டு விழாவை 1998-ல் எதிர்கொள்ளவிருக்கும் தமிழினம் எழுச்சி பெற இப் பேராபத்து தவிர்க்கப்படல் வேண்டும். தமிழர் மத்தியில் ஆயிரம் ஆயிரம் கட்சிகள் இது விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும். இவ் விடயத்தில் அரசியற் கட்சிகளை நெறிப்படுத்த வேண்டியவர்கள் தமிழ் வாக்காளர்களே என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களில் (1981 இல்) இருந்தே தேர்தல்களைப் புறக்கணிக்கும் மனப்பான்மை வழக்கப்படுத்தி வந்திருப்பவர்கள் தமிழ் வாக்காளர்கள். மாவட்ட அபிவிருத்தி சபைகளைப் போன்றே மாகாண சபைகளும் காத்திரமான சுயாட்சிக்கான அதிகாரப்பரவலாக்களைத் தமிழ்மக்ளுக்கு தந்திருக்கவில்லை என்ற கசப்பான உண்மையை சம்பந்தப்பட்ட சபைகளுக்கு தேர்தல்கள் மூலம் பதவிகளில் அமர்த்தப்பட்ட அரசியல் கட்சிகளே பின்னர் ஒப்புக் கொண்டிருந்தன. இதனை மறந்து விட முடியாது. கற்றுத் தேறிய அனுபவ படிப்பினையை மறக்கலாமா?

உத்தேச உள்ளூராட்சித் தேர்தல் எந்த விதத்திலும் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் அரசியல் தீர்வுக்கு கட்டியம் கூறுவது அல்ல. மாறாக தமிழர் தாயகக்கோட்பாட்டில் ஒன்றுபட்டு ஒருமித்த குரலை ஒலித்து வரும் தமிழ்க் கட்சிகளிடையே நிலவும் ஒற்றுமையை சிதைவுற வழிகோலும் என்பது திண்ணம். அதனாலேயே தேர்தலில் கண்டிப்பாகப் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவை உள்ள போதும், தேர்தலைப் பின்போடும்படி அரசை வலியுறுத்தியவாறே தேர்தல்களத்திலும் குதித்துள்ளன.

வாக்காளர்களே அரசியல் கட்சிகளை இவ்விடயத்திற் வழி நடத்த வேண்டும். தேர்தலை முழுமையாகப் புறக்கணிப்பதன் மூலம் குடாநாட்டின் வாக்காளப் பெரு மக்கள் அரசியல் கட்சிகளை நெறிப்படுத்தி வழி நடத்த முன்வர வேண்டும். செய்வார்களா?.

-த இ. திரவியம்
சுண்டுக்குளி.

★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## துணிச்சல்

இலங்கைச் சமசமாசக் கட்சி அமச்சரவையில் இருந்து வெளியேற முடிவு செய்திருக்கிறது. கட்சியின் மத்திய செயற்குழு இந்தத் தீர்மானத்திற்கு வந்திருக்கிறது.

சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் பல கட்சிகள் அங்கம் வகிக்கும் ஒரு கூட்டணியாகும். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அந்தக் கூட்டணியில் பிரதான கட்சியாகும். கம்யூனிஸ்ட் கட்சி சமசமாஜக்கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியன தத்தமது தனிமுத்திரையுடன் தேர்தலில் போட்டியிடவில்லை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சங்கமித்து அந்தக்கட்சியின் சின்னத்திலேயே போட்டியிட்டன.

இத்தகைய கட்சிகளில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) இப்போது அமைச்சரவையில் இல்லை. ஆகக் கடைசியாக நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது திருமதி ஸ்ரீமானி அத்துலத்முதலி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார்.

இப்போது சமசமாஜக் கட்சி அமைச்சரவையிலிருந்து வெளியேற முடிவு செய்திருக்கிறது. அரசாங்கத் தரப்பில் இருந்து கொண்டு ஆதரவு வழங்கவுள்ளது.

அதிகாரப் பரவல் திட்ட விடயத்தில் அரசின் முடிவுகளுக்கு சிறிமானி எதிர்ப்புத் தெரிவிப்பதும் அவரது நீக்கத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அமைச்சர்களின் கருத்தை அறியாமலே, கலந்தாலோசனை செய்யாமலே கருத்திணக்கம் காண்பதில் அக்கறையே இல்லாமல் ஜனாதிபதியும் அவரது நெருங்கிய சகாக்களும் முடிவுகளை எடுக்கின்றனர் என்பது ஸ்ரீமானியின் குற்றச்சாட்டாக இருந்தது.

அதே காரணத்தினாலேயே சமசமாஜக் கட்சியும் அமைச்சரவையில் இருந்து வெளியேற முடிவு செய்திருப்பதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமைச்சரவை, அரசாங்கம் மேற்கொள்ளும் முக்கிய முடிவுகள், அங்கத்துவக்கட்சிகளுடனான கலந்தாலோசனை இன்றி ஏற்கனவே செய்யப்பட்டுத் திடீரென அறிவிக்கப்படுகின்றன.

சமசமாஜக்கட்சியைப் பொறுத்தளவில் தீவிரமான தனியார்மயப்படுத்தலை அது விரும்பவில்லை அத்தோடு தேர்தலின் போது பொதுவாக இணங்கப்பட்ட பல விடயங்களில் இருந்து அரசு விலகிப் போவதாகவும் அது கருதுகிறது

எனினும் கட்சி தனிப்பட்ட ரீதியில் போட்டியிடாததால் அரசிலிருந்து வெளியேற முடியாது; கட்டப்பட்ட நிலையில் உள்ளது

கூட்டணிக் கட்சியின் அரசியல் உறவில் காலம் கழியக் கழியக் கசப்புணர்வும், குத்து வெட்டும் உண்டாவது ஒன்றும் புதியதல்ல; பழமையானது தான். பொ. ம. ஐ. முன்னணி அரசின் பதவிக்காலத்தில் அரைவாசி கழிந்து விட்டது.

ஆகையால் இனி நாளாக ஆக மேலும் பிரிவுகள் பிளவுகளை எதிர்பார்க்கலாம் நூலிழைப் பெரும்பான்மையுடன் நகர்ந்து கொண்டிருக்கும் அரச வண்டியை பின்னால் தள்ளுபவர்களும், முண்டு கொடுப்பவர்களும் தமிழ்க் கட்சியினரே.

கட்சியின், மக்களின் நலன்களுக்குப் பாதிப்பு உண்டாகும் என்றதும் அமைச்சர் பதவிகளையே துறக்க முன் வந்திருக்கிறது, சமசமாஜக்கட்சி, தமிழ்க் கட்சிகளுடன் ஒப்பிடும் போது அதன் துணிச்சல், துணிச்சலே தான்!

# அரச-எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலர் வெளிநாடு பயணம்

கொழும்பு, டிச. 22

பல அரசாங்க — எதிர்க் கட்சி உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட விஜயங்களை மேற்கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்லவிருக்கின்றனர்.

அமைச்சர்களான எம்.எச். எம். அஷ்ரப், ஏ.எச். எம். பௌசி, ஜி எல். பீரிஸ் ஆகியோர் உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டு ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். மேலும் பல அமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு தனிப்பட்ட விஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் வெளிநாடுகளுக்கு சுமார் 10 பிரதி அமைச்சர்கள் விஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர். (இ-10)

## நுளம்புப் பெருக்கம்

வரணி, டிச. 22

வடமராட்சி கிழக்கில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் மலேரியாநோய் பரவும் அபாயம் காணப்படுகின்றது.

மலத்தியோன் முடிவடைந்ததால் மலத்தியோன் விசிறும் பணி இப்பகுதியில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

மலத்தியோன் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பு கொண்டு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (ஐ-171)

## கரோல் கீத ஆராதனை

யாழ்ப்பாணம், டிச. 22

வருடாந்தம் நடைபெறும் சுண்டுக்குளி பரியோவான் ஆலய கரோல் கீத ஆராதனை இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ)

## வீதியில் வெள்ளம்

தென்மராட்சி, டிச. 22

எழுதுமட்டுவாள் - நாகர் கோயில் வீதியில் கழிக்கரைப் பகுதியில் சுமார் 100 யார் தூரம் வரை 2 அடி உயரத்திற்கு வெள்ளம் பாய்ந்து கொண்டிருப்பதால் அவ்வீதி வழியே வாகனங்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவ்வீதி வழியாகச் செல்லும் பாதசாரிகள் வெள்ளத்தில் கட்டப்பட்டுள்ள மரங்களைப் பிடித்தவாறு இடுப்பளவு வரை நனைந்தபடியே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

சுண்டிக்குளம் கடற்பகுதியிலிருந்து வரும் வெள்ளம் குடாக்கடல் ஊடாக இவ்வழியே தொண்டமனாறு வரை செல்வது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## தவறவிட்ட தங்கநகை

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகில் கண்டெடுத்த தங்க நகை ஒன்றை மாணவி ஒருவர் உரும்பிராய் இந்துக் கல்லூரி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்துள்ளார். தவறவிட்டவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ)

## விரிவுரைகள் ஜனவரி 15 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின் 98 கல்வியாண்டிற்கான விரிவுரைகள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

## வலி. தெற்கு செயலகத்துக்கு காணி

வலிகாமம் தெற்கு, டிச. 22

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவின் பாவனைக்கென காணி ஒன்று யாழ். செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியுடைய இக் காணியைப் பொருத்தும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஜனவரி முதல் திகதியில் இருந்து காணி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. (ஐ-152)

## வவுனியா அகதி முகாமில் யாழ். வாசி மர்ம மரணம்!

வவுனியா, டிச. 22

வவுனியா பூந்தோட்டம் கல்விக் கல்லூரி நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த யாழ். வாசியான தர்மலிங்கம் சந்திரசேகரம் என்பவரின் மரணம் குறித்து வவுனியா பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இவர் நலன்புரி நிலையத்தில் கழுத்தில் சுருக்கிடப்பட்ட நிலையில் சடலமாக பொலீஸாரால் மீட்கப்பட்டார்.

இவரது உடலில் தாக்கப்பட்ட காயங்கள் இருப்பதால் இவரது மரணம் குறித்து பொலீஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

தாக்கப்பட்ட பின்பு கட்டி தொங்கவிடப்பட்டிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து நலன்புரி நிலைய பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் உட்பட சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா மரண விசாரணை அதிகாரி எஸ். சிற்றம்பலம் பகிரங்க தீர்ப்பு வழங்கினார். (இ-21)

# யாழில் உள்ள சூழலை மறைக்கும் வெள்ளையடிப்புத்தான் தேர்தல்!

## தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம்

'ஒய்யாரக் கொண்டை' என்ற தலைப்பில் கொழும்பில் இருந்து வெளிவரும் தினமுரசு டிச. 21-28 பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கம் மறு பிரசுரம் செய்யப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக நாடகம் அரங்கேற்றப்படவுள்ளது!

நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து தனி வேறான பகுதியாகவே யாழ். குடாநாடு பிரித்து வைக்கப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணத்துக்கு ஒருவர் செல்ல வேண்டுமானால் பாதுகாப்பு அமைச்சின் 'கிளியரன்ஸ்' தேவை!

நாட்டின் ஏனைய பகுதிகளைப் பொறுத்தவரை அப்படியொரு கட்டுப்பாடு இல்லை!

மூன்று வருடகாலமாக ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து நீடிக்கும் பகுதியும் யாழ்.குடாநாடுதான்!

உலகில் வேறெங்கும் இத்தனை நீண்டகாலமாக ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்ததாக நாம் அறியவில்லை.

மனித உரிமை தினத்தில் அமைதியாக ஊர்வலம் நடத்தக்கூட யாழ். குடாநாட்டில் படையினர் அனுமதி மறுத்திருந்தனர்.

தலை நகரான கொழும்பிலும் மட்டக்களப்பிலும் மனித உரிமை தினத்தில் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் பல்வேறு அமைப்புகளால் நடத்தப்பட்டிருந்தன!

யாழ். குடாநாட்டில் மட்டும் ஏனைய பகுதிகளிலிருந்து தனியான சட்ட திட்டம்! மூச்சுக்காட்டாமல் உண்ணாவிரதம் இருக்கமட்டும் அனுமதி கொடுத்தனர்.

மக்களின் இரத்தத்தில் எதிர்ப்பு உணர்ச்சி கௌரவ எழுச்சி ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் குடாநாட்டுப் படையினர் குறியாக உள்ளனர்.

படையினரைக் குறை கூறக் கூடாது! அவர்கள் தங்கள் கடமையைத்தான் கச்சிதமாகச் செய்கிறார்கள்!

ஆனால் இத்தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள்தான் தங்கள் கடமையைச் செய்யத் தவறியுள்ளன!

தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்தே தாங்கள் போட்டியிடக்கூடிய சூழல் உண்டா? இல்லையா? என்பதுதான் அனைத்தினதும் பிரதான ஆய்வாக இருந்தது!

ஒருகட்சி கூட இத்தேர்தல் நடத்தப்படும் நோக்கம் என்ன? என்பதை அம்பலப்படுத்த முன்வரவில்லை!

அரசின் உள்நோக்கம் உலக அரங்கில் வெளிப்படாத வகையில் உதவியுள்ளன தமிழ்க் கட்சிகள்!

உள்ளூராட்சிச் சபைகளுக்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதால் நிலவும் சூழலில் மாற்றம் நிகழப்போவதில்லை!

குப்பை அள்ளக்கூட படையினரின் அனுமதி தேவைப்படலாம்!

திருமலை நகர சபையில் நடந்த கதை யாவரும் அறிந்ததே!

இந்நிலையில் — யாழில் உள்ள சூழலை மறைக்கும் உள்ளூராட்சித்தேர்தல் வெள்ளையடிப்புத்தான்!

ஒய்யாரக் கொண்டையாம் உள்ளே ஈரும் பேனுமாம்' என்பது போல உள்ளூராட்சித் தேர்தலாம் உள்ளே இராணுவ ஆட்சியாம் என்பதே பொருத்தம்!

நல்லூர் திருவிழாவைக்கூட யாழில் நல்ல சூழல் உள்ளதாக நிரூபிக்க பயன்படுத்தியது அரசாங்கம்!

அதனைவிடவும் — இந்த மினித் தேர்தல் திருவிழா அரசுக்கு பயன்படும்!

## ஈ.பி.டி.பி.

(முதலாம் பக்கத் தொடர்)

கூட்டத்தின் பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:-

ஒரு பொதுக் கருத்தை உருவாக்க ஐந்து கட்சிகளும் சந்தித்தன. ஈ. பி. டி. பியைப் பொறுத்தவரை உள்ளூராட்சித் தேர்தல் நடத்தக் கூடிய சூழல் இல்லை என்பதையும், அதே நேரம் அதிகாரம் கூடிய வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதையும் கூறினோம்.

ஆனால் மாகாணசபையின் அதிகார வரம்புக்கு உட்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இத்தேர்தலில் பங்குபற்றுவதா? இல்லையா? என்பது குறித்து எமது செயலாளர் நாயகம் யாழ். நகரில் கடந்த 9 நாள்களாக முகாமிட்டுப் பல்வேறு அமைப்புக்களுடனும், பொதுமக்களுடனும் பேசிக் கருத்துக்களைக் கேட்டு வருகிறார்.

இந்த அடிப்படையில் கட்சியின் உயர்மட்டக் குழு நேற்றிரவு ஆராய்ந்துகொண்டு இருக்கிறது. இன்று அதன் முடிவு வெளியிடப்படும்.

தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் சகல கட்சிகளும் சேர்ந்து பகிஷ்கரிப்புத் தொடர்பான அறிவிப்பை அரசுக்கு வெளிப்படுத்தி இருக்கவேண்டும். ஆனால் தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் சில கட்சிகள் தலைமை வேட்பாளர்களையும், வேட்பாளர்களையும் அறிவித்து விட்டன. இதன்மூலம் இத்தேர்தலில் பங்குகொள்ளத் தமிழ்க் கட்சிகள் தயார் என்ற சமிக்ஞையைத் தமிழ்க் கட்சிகள் அரசுக்குக் காட்டி விட்டன.

ஒருமித்த கருத்தை உருவாக்கி தேர்தல் நடத்தக் கூடிய சாத்தியக்கூறு இல்லை என்பதை அரசுக்கு வெளிப்படுத்த ஈ. பி. டி. பி. எடுத்த முயற்சி இதன்மூலம் தோல்வி அடைந்து விட்டது.

இன்று நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் இறுதி நாள்களில் இதுபற்றி ஆராய்வது தேர்தலை எதிர்கொள்ள, மக்களைச் சந்திக்க தயங்குகின்ற ஒரு தோற்றப்பாட்டை மக்களுக்கு உணர்த்திவிடும் என ஈ. பி. டி. பி. கருதுகிறது. அது மட்டுமல்ல தேர்தலில் கலந்து கொள்வோம் என்று அறிவித்த கட்சிகள் இறுதி நாள்களில் திடீரெனப் பகிஷ்கரிப்பு என்று முன்வருவதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எனினும் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் பகிஷ்கரிப்பு விடயத்தில் ஒருமித்த கருத்தை எட்டும்போது ஈ. பி. டி. பி. அதைப் பரிசீலிக்கும்.

ஆயுதக் குழுக்கள் என்று விமர்சனம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணி பகிஷ்கரிப்பு தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் ஆராய வந்தது குறித்து நாம் பாராட்டுகின்றோம்.

தமிழர் பிரச்சினை தொடர்பாக எதிர்காலத்தில் தமிழ்க் கட்சிகளிடையே ஒத்த கருத்தை ஏற்படுத்த தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வரவேண்டும்—

இப்படி அவர் கூறினார்.

## நாளை

மார்கழி 8

செவ்வாய்க்கிழமை

திதி: நவமி

மாலை 6.36 வரை.

நட்சத்திரம்: அத்தம்

பிற்பகல் 1.44 வரை.

சுபநேரம்: 10 55-12.25

ராகுகாலம்: 3.25-4.55

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் தனித்துப்...

(முதலாம் பக்கத் தொடர்)

வில்லை.

இத்தகைய சூழ்நிலையில் ஈ. பி. ஆர். எல். எவ். இந்த முயற்சியைத் தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நாமும் தனித்துப் போட்டியிடுவது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக எழுந்துள்ளது.''

ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ்பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலைப் பகிஷ்கரிப்பது தொடர்பாக நேற்று நடந்த கூட்டத்தையடுத்து அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய சூழ்நிலையில், யாழ்ப்பாண உள்ளுராட்சிச் சபை தேர்தலின் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வலியுறுத்தியது. ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி உட்பட ஒவ்வொரு தமிழ்க்கட்சியும் தமது தனித்தனியான பத்திரிகை அறிக்கையில் தேர்தல் பகிஷ்கரிப்பை வலியுறுத்தின. எனவே எல்லாத் தமிழ்கட்சிகளும் ஒருமனதாக இதனை ஒரு தீர்மானமாக எடுத்துச் செயற்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 20 ஆம், 21 ஆம் திகதிகளில் அனைத்து தமிழ்க் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தியது — என்றுள்ளது.

## தனித்துப்.

(முதலாம் பக்கத் தொடர்)

உறுப்பினர்கள் யாழ். வந்து சேருவதில் தாமதம் ஏற்பட்டதால் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்றுக் காலை 11.30 மணி அளவில் கூட்டம் மீண்டும் கூட்டப்பட்டபோது ரெலோ உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஈ. பி. டி. பி, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை கூட்டத்தில் கலந்து கொண்ட ஏனைய தமிழ்க் கட்சிகள் ஆகும்.

நேற்றைய கூட்டம் பகல் 2.30 மணி வரை நடைபெற்றது.

வெளியாட்கள் எவரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. (இ-103-9-3)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்)

இரு விவகாரங்களுக்கும் நிலையான தீர்வொன்றைக் காண முடியும்.

ஐ. தே. கவும் அரசும் பேசுவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. விடுதலைப் புலிகளுடன் பேசுவது தான் இன்றைய தேவை ஆகும்.

இது தொடர்பாக கடந்த 9 மாதங்களாக ஜனாதிபதிக்குப் பல கடிதங்களை அனுப்பியுள்ளேன். இது வரை எந்தவொரு கடிதத்துக்கும் பதில் கிடைக்கவில்லை.

மக்கள் அமைதியான சூழ்நிலையில் வாழ்வதற்கான சாதகமான சமிக்ஞை ஒன்று எதிர்வரும் ஜனவரிக்கு முன்பு அரசு தரப்பிலிருந்து வெளியாக வேண்டும்.

இல்லையேல் ஐ. தே. க. நாடெங்கும் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை நடத்தும்.

சர்வசன வாக்கெடுப்பு, மாகாணசபை, நாடாளுமன்றம் உட்பட எந்தவொரு தேர்தலுக்கும் முகம் கொடுக்க ஐ.தே.க. தயார் நிலையில் உள்ளது. அதற்கு அரசு தயாரா?

இப்படி அவர் கேட்டார். (இ-21-3)

## 5 ஆம் கட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

களை அரசுக்குக் கொடுக்க உங்களுடன் இணைந்து போராடுவோம்.

''காணாமற்போனோரைக் கண்டுபிடிக்கும் முயற்சி நடக்கும் அதே நேரம் காணாமற்போனோர் பட்டியலும் நீண்டு கொண்டு போகிறது'' என்றார்.

ஈ. பி. டி. பி. பிரமுகர் நலோகன், எஸ். றீகன், எஸ். பவான், அருட் திரு சூசைநாதன் அடிகள் ஆகியோரும் உரையாற்றினர். (இ-3-9-51-103)

## யாழ்.தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

படுத்துவதற்காகவே உள்ளுராட்சித் தேர்தலை நடத்துகின்றோம்.

மக்கள் தமது வாக்குரிமைகளை இப்பொழுதாவது ஜனநாயக முறைப்படி பயன்படுத்த வேண்டும். மக்களுக்கும் உலகுக்கும் இதனை உணர்த்தும் வகையிலேயே இத்தேர்தல்களை நடத்துகின்றோம் —

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் சார்பில் தேர்தலில் போட்டியிட வேட்பாளர் பட்டியல் தயாராகவுள்ளது. எந்தவொரு கட்சியும் இத்தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராகவில்லாவிட்டால் இறுதி நேரத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வோம் என்றும் அவர் கூறினார்.

எக்காரணம் கொண்டும் தேர்தல் பிற்போடப்படமாட்டாது — என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## சுழிபுரத்தில் தேடுதல்!

சுழிபுரம், டிச. 22

சுழிபுரம் பகுதி நேற்று முன்தினம் அதிகாலை சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இளம் வயதினர் சில்லாலையில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கு அழைத்துச்செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (இ-28)

## தமிழ் நாடு...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்றாலும் கூட புதிய கட்சி தொடங்கியதில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் அவர் கூறினார். (இ-3)

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பகிஷ்கரிப்புப்பற்றி ஆராயத் தொடங்கிய பின்னர் அரச ஆதரவிலான சுயேச்சைக் குழுக்களோ அன்றி சிங்களக் கட்சிகளின் பிரதி நிதிகளோ தேர்தலில் நிறுத்தப்படுவதற்கான தயாரிப்புக்கள் தீவிரமாகி வருவதை நாம் அவதானித்ததன் காரணமாகவும் —

உள்ளுராட்சித் தேர்தல்களில் எமது கட்சி போட்டியிட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

''புளொட்'' அமைப்பின் மத்திய குழு நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பகிஷ்கரிப்பு முயற்சி தோல்வி கண்ட பின்னர் விடுத்த அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-103)


மாபெரும் தள்ளுபடி விற்பனை

21 - 12 - 1997 முதல் 31 - 12 - 1997 வரை

அனைத்து ஆடை ரகங்களுக்கும்

கோபிகா ஆடை அகம்

04, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

04, New Market (inside), Jaffna.

(சி/2451)



வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

லைடனின்

மலிவு விற்பனை

காலம்:

1-12-97 முதல் 31-12-97 வரை

(சகல பொருள்களுக்கும் விசேட கழிவு உண்டு)

லைடன் புடவை நிலையம்

32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2189)



நத்தார் புதுவருட மலிவு விற்பனை

பெண்மணிகளே!

நீங்கள் ஓர் அலுவலரா? ஆகவே உங்களுக்கு தினம் தினம் அணிவதற்கு அழகான மலிவான சாறிகள் தேவை. அதனை மிகக் குறைந்த விலையில் பலதரப்பட்ட டிசைன்களில் இந்தியாவில் இருந்து நேரடி இறக்குமதி மூலம் வழங்குகின்றோம்.

மற்றும்

சுபமுகூர்த்தத்துக்கான ❖ பட்டுப் புடவைகள் ❖ பட்டு வேட்டிகள்

❖ கொட்டன் சாறிகள் ❖ பலதரப்பட்ட டிசைன்களில் சேட் வகைகள்

❖ T சேட் வகைகள் ❖ சூட் வகைகள் ❖ ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள்

❖ சாறி பிளவுஸ் வகைகள் ❖ துணி வகைகள்

❖ குழந்தைகள் முதல் பெரியவர் வரை சகலவிதமான நினுசுகளையும்

ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

ராசி சில்க்ஸ்

70, 71A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

நல்லி சில்க்ஸ்

121/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

RASI SILKS

237, Main Street, Colombo – 11. T. P. 449944

ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மையையும் புரிந்து கொள்வீர்கள்.

(எமது ஸ்தாபனத்துக்கு வேறு கிளைகள் கிடையாது என்பதை அறியத்தருகின்றோம்.

(சி-2447)



லலிதா புடவை மாளிகையின் மகிழ்ச்சி தரும் செய்தி!

தரத்தில் உயர்ந்து விற்பனையில் அதிகரித்து பாவனையில் நீடித்து உழைக்கும் இந்தியாவில் புகழ் பெற்ற கத்தரி மார்க் சாரங்களின் உற்பத்தியாளர்களான அன்பு ரெக்ஸ் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற இலங்கையின் நேரடி இறக்குமதியாளர்களான

TOP TEX

டொப் ரெக்ஸ்

இல: 33 A, கொழும்பு 11

நிறுவனத்தாரின் மகிழ்ச்சி தரும் செய்தி!

தலை நகர் போலவே யாழ். நகரிலும் கத்தரி மார்க் சாரங்கள் நீடித்த பாவனையால் மக்களைக் கவர்ந்து விற்பனையில் முன்னணி பெற்றுத் துலங்கும் கத்தரி மார்க் சாரங்களின் வடமாகாண ஏக விநியோகஸ்தர்களாக லலிதா ரெக்ஸ்ரைல்ஸ் நிறுவனத்தார் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை டொப் ரெக்ஸ் நிறுவனத்தார் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றார்கள்.

இந்தியாவில் பிரபல்யம் வாய்ந்த கத்தரி மார்க் சாரங்களின் வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்.

லலிதா ரெக்ஸ்ரைல்ஸ்

இல 5, 6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(51951)



நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

'மகாநதி'யின்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

10% முதல் 20% வரையிலான சிறப்புக் கழிவு

இத்தள்ளுபடி 31 – 12 – 1997 வரை

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்

நத்தார், புதுவருடப் புடவைகளுக்கு

மகாநதி புடவை அகம்

(முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை, சாவகச்சேரி.

(சி/2407)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org